பிஸ்மில்லாஹி.

நாகூர்

# மீரான் சாகிபு ஆண்டவரவர்கள்

# காரண அலங்காரப் பதங்கள்.

இஃது

நாகூர் பெற்றபெருமாளாலியற்றப்பட்டு,

ஷெயூர்

நா. வேலாயுத மேஸ்திரி

மு. சோமசுந்தரம்

இவர்கள் முயற்சியால்,

நாகபட்டணம்

"ஸ்காட்டிஷ் பிராஞ்சு பிரஸில்"

பதிப்பிக்கப்பட்டது.

1919.

பிஸ்மில்லாஹி.

நாகூர்

# மீரான்சாஹிபு ஆண்டவரவர்கள்

# காரண அலங்காரப் பதங்கள்.

காப்பு வெண்பா.

கருணைமிகுங் கஞ்சஸவாய் காதரொலி நாதரின்மேல்
தரணிதனிற்பாமாலை சாற்றிடவே
அருணிறைசேர் ஏகறப்பில் ஆலமீன் இரசூலாய்வக் துதித்த
தாஹாநபிதாளேசரண்.

(1) பதம்-வேலவாயேனை என்கிற மெட்டு.

பல்லவி.

காதிரேயெனக் காதாரமருள்வீர்

அனுபல்லவி.

தாதவிழ்மலர்த்தாள்
கோதறவளித்ததாள் சாகுல்ஹமீதொலியே
தாமரைமலர்த்தம்பமே நம்பினேனப்துல் (காதிரே)

2. ஆணிப்பொன்னிதியார் மாணிக்கநகர்வாழ்
அசன்குத்தூசின்பாலரே
ஆளுவீரெனை அஞ்சரண்டஞ்சமே யப்துல் (காதிரே)

3. கண்ணகனிலத்தோர் கண்ணுமெய்த
தவத்தோர கருணைபெறுமகிதியே
காரய்யாவருட் கண்ணிறை யண்ணலேயப்துல் (காதிரே)

4. கஞ்சமென்மலர்த்தாள் செஞ்சரணளித்தாள்
கஞ்சஸவாயொலியே காதலாயெமைக்கண்டடித்
தொண்டருளப்துல் (காதி)

5. மகிதலத்தவா ஜெகதலத்தரசே
மணிகொழித்திடுங்கடல்
மாணிக்ககர் வள்ளலே விள்ளருமப்துல் (காதிரே)

6. நல்வனஞ்செழித்தார் பல்வளம்பொருத்தார்
நாகைநகர்க்கரசே
நம்பினேனுமை நாதரே நீதரேயப்துல் (காதிரே)

## (2) பதம் சிந்து அடதாளம்.

அணியுற்றிலகுரெத்ன மணிபெற்ருெளிமிகுத்து
வழகிற்கொருதிலகமாகியே மதி
திகழுற்றிசையுந்திருநாகையே
வளர் அந்தமாமர விந்தமார்தட
மெந்தநாளுமிசைந்து சூழ்தர
வகிலத்தவர்வணங்கும் காதிறே எந்தன்
கவலைத்தவிர்த்தருள் நன்னீதரே அணியுற்றிலகு

2. சலவாத்தொடுமறைகள் முறையாய்க்கடலொலிபோல்
சறகுப்படிமுழங்கும் நாளுமே தறுகா
வரையிற்புகழ்மிகுத்துவாழுமே
கெதி தஞ்சமென்றுமை யஞ்சலித்திடு
செஞ்சரண்டனை கொஞ்சமெற்கருள்
தவளத்தொவிதிகழ் நாகூரரே எங்கும்
புகழ்பெற்றிலகும நமிபேரரே அணியுற்றிலகு

3. களபத்தொடுபுழுகும் அகில்வர்த்திகள்
புகையும் கமழ்த்தறுகாவளர்வாசரே
எங்குந் திகழக்கலிமாநிறைபோஜரே
நினைக் கண்டுநேர்வழிகொண்டு நாடொரு
நின்றுபோற்றிய தொண்டர்மீதுறு
கலியைத்தவிர்த்தருள் செய்தாளுமே நல்ல
வழியைப்புகன்றிடு மேந்நாளுமே

4. தவளத்தொவியிசைக்குங் கடல்நித்தில
மொதுக்குந் தரையுட்படவிருக்குந்தானமாம்
மயில் குயில் தத்தையோடிசைக்கும் ஞானமாம்
எழில் தங்குநாகூரிலங்கிவாழ்வுறு
மங்களந்திகழ் துங்காரகிய
சகலர்க்குதவுமப்துல்காதிறே துயர்
விலகக்கிருபைசெய்வீர் நீதரே (அணியுற்றிலகு)

## (3) பதம் இராகம் கலியாணி அடதாளம்.

### பல்லவி.

ஆணிப்பொன்னாகூர் வந்தாளுங்கெம்பிரரே
அன்பியாநாயகத் தின்பநற்பேரரே

## அனுபல்லவி.

மாணிக்கமானகர் வந்துபிறந்தோரே
மருமாணடி யொருகாலமு மறவாதருள் புரிவீர்நிதம் ஆ

2. கம்மியன்குன்மவினை தவிர்த்தாண்டோரே
காவின்மிதியடிகாக்ஷியாய்ப்பூண்டோரே
இம்மானிலத்திலெங்கெங்கும் நிறைந்தோரே
ஏனையாள்மலர் மணமாரடி யிணையே துதி நினைவீர்திடும் ஆ

3. சிறுநீரைப்பாலாகச் செய்தநன்னீதரே
செய்வினை தீர்த்திடுஞ் சீரப்துல்காதிறே
மருகமழ்வாசமாரு தமெய்ப்போதரே
வரைசேர்மணி முறைசேர்த்திடு
பிறையேர்கொடி நிறையோங்கிய (ஆணி)

4. பொதிகைசங்யாகிக்குப் போஜனமீந்தோரே
போனதோர்கிஷ்தியைப் போதறமீட்டோரே
துதிசெய்வோர் துன்பந்தொலைத்தருள்காதிறே
தொடர்மாபவ மடராதுயர் சுடர்போல்வரு
கடலேயருள் (ஆணிப்பொன்)

## (4). திருப்புகழ்—மெட்டு.

1. புவியிலுருவாகிவந்து சதுர்மறைகளே தெரிந்து
புவனமுழு தாளுகின்ற வொலிநாதா
புதுமைமிகவே விளங்க தலமதனிலே சிறந்த
புகழ்பெறுகுநாகூர் வந்து திகழ்நீதா

2. அவனியிலுளோர் மகிழ்ந்து னடிதொழுதுமே புகழ்ந்த
அவர்வினைகளோட வென்றும் அருள்வோரே
அமலபதமீது தொண்டு கவனமுடனே வியந்து
அநுதினமுமே பணிந்தே னருள்தாராய்

3. சுவணநகரார்வணங்க வடிசிலியல்பா விலங்க
துரிதமுட னுடியுண்ட சிறுபோதே
துறவினிலையே யணிந்து மணிகொள்குவாலீரில் சென்று
துதிகுருமுநீது கொண்ட குணபோதா

4. பவவினைகளோட வென்று னிருபதமுமே பணிந்தேன்
பதவிதரவேணு மென்று குயில்காடை
பரவைபுராசூழ் வணங்க டிகள்தலகன்னுலைகயின் கண்
பரமகுருவாய் விளங்கும் பெருமானே.

## (5). தெம்மாங்கு—மெட்டு.

1. நாகூர்தனிலமர்ந்து நானிலமெல்லாம்புரக்கும்
சாகுல்ஹமீதரசே தான்மலர் தந்தாண்டருள்வீர்
சந்ததமுன்னருள் கூடுஞ் சம்பவமே
தருகாவளர் புராவினங்கள் வைபவமே
2. எத்தேசமன்னர்களும் இயமுடிசாய்த்திடவே
சித்தார் செங்கோலரசு செய்தளிக்கும் செம்பிரரே
தேவர்களுன்னருள் காணுங்காரணமே
செல்வீகநிறைந்த பரிபூரணமே
3. நகராநகு பத்துடனல் வேதகோஷ்டங்களுந்
தவராதென்னாளும்வளர் சாம்பிராணித் தூபங்களும்
சந்தன நற்புனுகோடுமலர் கமழும்
ஜவாது நிறைகஸ்தூரி வாசங்களும்
4. அன்னைவயற்றிருந்தே யற்புதங்கள் காட்டிடவே
சொர்னந்திகழ் மாணிக்க சுந்தரம்போல் வந்துதித்தோர்
சுத்தபரி பூரணசுயஞ்சுடரே
சொல்லரிய நித்தியசுகானந்த பீரே
5. அன்பா வினையகற்றும் அருளார் ஹமீதரசர்
சம்பிரமவுல்லாசமதை சாற்றிடவு சேர்த்தியதாய்
தாணிமுழு தாளுஞ்செங்கோலணிதீரர்
தாஹாநபி நாயகத்துக்கொருபேரர்
6. கள்ளர்களைத்திருத்திக் காரண பக்கீர்களாக்கிக்
கொள்ளக்கிருபைசெய்த கோமான் ஹமீதொளியே
கொம்பொடுவரச்செய்தெனை காத்திடவே
குவலயமெல்லாங் காங்கொண்டேற்றிடவே
7. வேதாந்த முத்தொளிவாய் விளங்குமணி மாணிக்கப்பூர்
மீதார்ந்து நாகரெத்தன வியனாகூர்வந்தமர்ந்தீர்
வித்துவவிதேகபர விற்பனமே
விண்ணுலகோர் போற்றுமநவ ரெத்தினமே
8. கருணாகரக்கடலாய் காசினியில் வந்துதித்தோய்
சரணாரவிந்தசெதி தந்தருள்வீர் சந்ததமும்
சமபிரமவைபோகசதா னந்தமுடன்
தருகாவளர் நாதரப்துல் காதர்சாண்.

## 6. பின்முடுகு கும்மிகள்.

1. தென்னாகூர் வாழ்ந்திடும் மன்னர் ஹமீதொலி
சீர்மிகுவைபவந் தானுரைக்க
திருவாழ்வுறு மதிணவளர் குருவாகிய பெருமானபி
செய்ய பொற்பாதம் பணிந்திடுவோம்

2. காசீன்கிளேயி லவதரித்த பய
ஹாம்பர்கபிபே ராயுதித்து
கடனுகையி னிடமேவளர் தடமாநதிபுடைசூழ்தரு
காதிர் கஞ்சஸ்வாய் நாயகமே

3. தஞ்சையரசன் பிணியகற்றித் திருத்
தாண மலர்வாசஞ் ஜெகங்குலவ
தவழ்மாமதி நிலவோங்கிய புகழ்சேரணி திகழ்நாகையின்
சாகுல்ஹமீதொலி நாயகமே

4. கல்லைக்கப்பலாகச் செய்து கடலோடிக்
காரணங்கர்ட்டிய பூரணரே
கண்பாரேனை யன்பாகவே மண்பாரினில் பண்பாகிய
காதிற் ஹமீதுல்லா நாயகமே

5. தேங்காய் தனக்கொற்றை கொம்புமுளைத்திடச்
செய்திட்டகாரண நாயகரே
திடமார்கடல் புடைசூழ்நதி வடபாலியல் தடநாகையின்
செய்கப்துல்காதிற் நன் னுயகமே

6. தேரைப்பிரம்பினு லோரடி தாக்கிடச்
செவ்வையாய் வீதியிற் சுற்றிடவே
திருவார்நகர் தனிலேவரு மொருகாரண மருள்கூடிய
செய்யதப்துல்காதிற் நாயகமே

7. எத்திசையும்புகழ் பெற்றே யிலங்கிடும்
எங்களிரசூல் நபி பேரர்
இதமார்கத மதிலேதுதி நிதமேவளர் மதியின்றருள்
ஏர்வளர்காதிற் நன்னுயகமே

8. செய்பவந தீர்த்திடுஞ் செய்யத் ஹமீதுல்லா
செந்தாமரைப்பதஞ் சிந்தை செய்ய [கத்தியஸ்
ஜெகமெச்சிய நவரெத்தின வினமொய்த்துயர் கன
சீரப்துல்காதிற் நன்னுயகமே.

## 7. பதம்—சண்முகாஉன்—என்கிற மெட்டு.

### பல்லவி.

மெய்யனே சாகுல்ஹமீ தையனே
உன்பதமேற் குய்யவே தானருள்வீர்.

### அநுபல்லவி.

1. வையகந்தனிலெந்தன் பொய்யிருளகற்றியே
செய்யபொற் பதந்தாரும் துய்யனே உய்திடவே
மண்ணின்மேல் வந்துதித்த அண்ணலெ
உன்னையேநான் எண்ணினேன் தாளருள்வீர்

2. இப்புவிதனிலுந்தன் மெய்ப்புதுமைகள்மெத்த
விற்பனமாயிலங்கும் நற்பதமேற்கருள்வாய்
நாதரே நவ நாதபோதரே
அருள்நிறை நீதரே வந்தருள்வீர்

3. சீதகமலமலர் செய்யபொற்பதமெற்கு
நீதமோ டளித்தருள் சாதனையாகிநிற்க
காதலா யுன்னிருள்தாள் ஓதினேன்
சர்வலோகநாதரே போதருள்வீர்

4. கண்மணியாயுலகில் நன்மணியாயுதித்த
காரணனந்தபரி பூரண வாரணரே
காரய்யா ஏழைமுகம் பாரய்யா
என்தன்மிடி தீரய்யா பூரணரே (மெய்யனே).

ஸ்தோத்திர விருத்தம்.

கடலுலகில்வளமோங்குமாணிக்கநகர்தனிற்
காக்ஷியாய்வந்தஒலியே
கதிருதையமாமெனவசன் கொத்தூசவரிடங்
கண்மணிபோல் வந்த ஒலியே
திடமுடன் முகலலதிவிற் சென்று நற்புதுமை
திண்ணமாய்ச் செய்த ஒலியே
சிவாஜிராஜனின் பில்லி சூனியமேக
சிம்மமாய் வந்த ஒலியே
புடவிதனி லேழிடம் பூமியுள் மறைந்துமே
புதுமையாய் வந்த ஒலியே
புன்னகவனமென்னுந் தென்னகூர்தன்னிலே
புக்கிருந்தாளும் ஒலியே
தொடர்பவ மகற்றியெனை யாளுதற்காகவே
தொண்டனேன் போற்று மொலியே
தொல்லுலகி லுள்ளவர்க ளுக்கருள் புரிந்திடத்
தோன்றிடுங் காதரொலியே.

வாழி விருத்தம்.

ஹக்கனருள் பெற்றிலகு அண்ணல் நபிவாழி
அனவரத மஹ்பூபுசுபு கானிவாழி
தக்கபெரியோனருள் தறித்த வொலிமார்கள்
சாகுல்ஹமீதாண்டகையு மென்னுளும்வாழி
திக்குபுகழ் நான்மறையும் புறுக்கானும் வாழி
தீனவர்கள் வானவர்கள் ஞானிகளும் வாழி
பக்குவமா யிதைப்படிப்போர் கேட்போரும் வாழி
பாருலகிலென்னாளும் பலன் பெருகுவீரே,

## ஜாவளி வர்ணமெட்டு

### பல்லவி.

நாகூர் கண்காக்ஷியே தர்காவலங்காரத்தின்
மாக்ஷியே.

147612

### அனுபல்லவி.

சாகரம்சூழ்கின்றதாலே சேகரம்பிரகாசவேலே (நா)

### சரணம்.

தஞ்சைஜீவாஜிராசன் சஞ்சலம்தீர்த்தாலே.
சகலபேர்களும்வந்து சரணம்பணியமேலே
தர்காவலங்காரத்தை காற்றவேணுமென்றுலே

ஸ்தலமதைந்துவெளிகட்டாச்சு அதனால்
சாஸ்வதமிணராவைந்துசாக்ஷி அதின்மேல்
சம்பர்ம் துவஜங்கள் நீக்கி
சாற்றகேளும்ஆக்ஷி சகலமும்கண்காக்ஷி.

நகருமேளங்கள்மணி முழங்கும்மேடைகள்
ரெண்டின் நடுவேள்தூப்புமேடை கெடியாரவாசல் மூந்தி
நறுமணம்புஷ்பம் கமிளிருபுரமும்துலங்க

நடிவிலங்கிடுமண்டபமேடை
இருபுரமும்நகுபத்பியாண்டு வாத்தியத்தோடே
வெகுபேர்நாடி கொண்டாடி கின்றசிலேடைகா
நற்சாம்பிராணிவாடைஞான ஒளிக்கிரீடை

பளிங்கிசெடிவிளக்கும் பலவர்னகுளோப்பர்கள்
பதியும் கிலேக்கண்ணாடி ராஜக்குண்டுசேட்டுகள்
பவர்லாம்புடனே கிலர்வெனும் கியாஸ்லேட்டுகள்

பக்கங்களெல்லாங் குரானிலங்க
புராவினங்கள் பரந்துக்கொண்டனுதினம் துலங்க
ஏழுவாசனுள்பாக்கிய அமீதொலியும்விளங்க
பணிந்தேனுடல்வணங்க பகர்பெருமானிலங்க.

முற்றிற்று.

---

ஸ்காட்டிஷ் பிரான்சு பிரஸ், நாகபட்டணம் 19—97.